

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., இரா.ஸ்ரீதரன், பெ.சு.தி.சரவணன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஸ்குமார், டி.திலீப்குமார், செல்வபிரகாஷ், ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.

### கழக மாநில கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

# சேர்காடு கென்னடி மணி விழா - பணி நிறைவு பாராட்டு விழா!

## முன்னாள் அமைச்சர் துரைமுருகன் – டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. வாழ்த்துரை!

வேலூர், மே 30 - வேலூர் வடக்கு மாவட்டம், காட்பாடி தொகுதியில் வாழ்ந்து வரும், கழக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் சேர்காடு. கென்னடி அவர்களுக்கு வரும் 2.6.2026 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில், பணி நிறைவு பாராட்டு விழா மற்றும் மணிவிழாவும், காட்பாடி விருதம்பட்டு, ஆல்கார்ட் நினைவாலய அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் தலைமை தாங்கிட, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் (ம) முரசொலி தமிழ் மன்றம் நிறுவனர் சி.கோபி வரவேற்றிட, என். பரமசிவம், என்.தேவநேசன், எச் அரிகிருஷ்ணன், நித்ய குமார், சு. ஜெகராஜ், கோவி. அழகிரி ஆகியோர் முன்னிலை வகிக்க,

கழக பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் திராவிட செம்மல் துரை முருகன், வேலூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி மற்றும் கிங்ஸ்டன் கல்விக் குழுமத்தலைவர் சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோர் பாராட்டி வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் மாநகர துணை மேயர் சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், மாநகர மண்டல தலைவர் புஷ்பலதா, ஒன்றிய செயலாளர்களான ஆர் கே.தேவேந்திரன், எஸ்.சரவணன், வன்னிய ராஜா, வி.தயாநிதி, கருணாகரன், தணிகாஜலம், ஜி.ரமேஷ், பிரம்மபுரம் பழனி, எல், ரவிச்சந்திரன், பரமசாத்து ரவி, கே.சீதாராமன், நேரு, ஏ.கே முருகன், முருகபெருமாள், கே.தயாளமூர்த்தி. லோகநாதன், வாசுகி கோடீஸ்வரன், டீ.டா சரவணன், சீனிவாசன் சா.பரிமளம், கிருபாகரன், கே.ஏ. கண்ணன், சாந்தகுமார், ஸ்டாலின் தயாநிதி, முடிநாம்பட்டு குப்பன், மரு.கோவி தூயவன், மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

முடிவில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் சேர்காடு கென்னடி அவர்கள் ஏற்புரை ஆற்றிட, நித்யா பிரியா பியூலா (மனைவி) கெ.சாரதா மேரி (மகள்) ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்வை முரசொலி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்கிறது.

### 'முதல்வரே பல்கலைக்கழக வேந்தர்' என்ற தி.மு.க. அரசின் நடைமுறையைப் பின்பற்றும் கட்டாயம் கிடையாது – என்ற

# த.வெ.க. அரசின் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதனுக்கு கண்டனம்!

## திருவண்ணாமலை இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்; முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, மே 30- மாநில சுயாட்சிக்கு எதிராக, தமிழக முதல்வரே பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற தி.மு.க. அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது என்கிற, த.வெ.க. அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் அவர்களின் அறிவிப்பை தி.மு.க. இளைஞர் அணி கண்டிக்கிறது என்கிற பல்வேறு தீர்மானங்கள், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

28.05.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என். அண்ணாதுரை தலைமை வகித்தார்.

மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலிப்குமார், செல்வம்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் மற்றும் இளைஞரணி ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. சட்டமன்ற கட்சியின் தலைவராக, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், துணைத் தலைவராக கே.என்.நேரு அவர்களையும், கொறடாவாக எ.வ.வேலு அவர்களையும், செயலாளராக தங்கம் தென்னரசு அவர்களையும், பொருளாளராக எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களையும், துணை கொறடாவாக கோ.வி. செழியன் அவர்களை தேர்ந்தெடுத்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களை வெற்றிபெற வைத்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் இந்த மாவட்ட கழகம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

அதேபோல் வந்தவாசி தொகுதியில் எஸ்.அம்பேத்குமார் அவர்களை வெற்றி பெறவைத்தமைக்கும், இந்த கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!**

நவீன தமிழகத்தை கட்டமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலஉதவிகளோடு வருடம் முழுவதும், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் கொண்டாடுவதென இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்த் தாய் வாழ்த்தை மூன்றாமிடத்திற்கு தள்ளியதோடு மட்டுமல்லாமல் விஜய் அரசு தேர்தல் வாக்குறுதியில் இரண்டரை ஏக்கர் விவசாய நிலம் வைத்திருப்பவர்களுக்கு முழு கடன் தள்ளுபடி என்றும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள், வங்கியில் வாங்கிய கடனில் 50 சதவீதம் தள்ளுபடி செய்வதாக கூறிவிட்டு, வெற்று அறிவிப்புகள் கொடுத்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் ஜோசப் விஜய் அரசை இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

மீண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட, சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு அவர்களின் தலைமையில் நமது மாவட்ட இளைஞர் அணி உண்ணாமல், உறங்காமல், ஓய்வுகொள்ளாமல் பணியாற்றுவதென தீர்மானிக்கிறது.

பல்கலைக் கழகத்திற்கு வேந்தர்களாக, அம்மாநில முதல்வர்களே இருக்கலாம் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றியும், ஆளுநர் ஒப்புதலோடு, இந்திய நாட்டின் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதோடுமட்டுமல்லாமல் உச்சநீதிமன்றத்தின் மூலம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளும் கிடைத்து, இந்திய நாடே கொண்டாடியது.

ஆனால், தற்போது, புதிய மாநில அரசு, மாநில சுயாட்சிக்கு எதிராக, தமிழக முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற தி.மு.க. அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது என்கிற, த.வெ.க. அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் அவர்களின் அறிவிப்பை திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி வன்மையாக கண்டிக்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், அமைப்புசாரா தொமுச., ஏ.ஏ.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

செங்கம் நகர செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே. அன்பு, ப.முருகையன், எம். சீனுவாசன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறினார்.



முன்னாள் ஒன்றிய அமைச்சரும், கழகத்தின் துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா எம்.பி, பட்டவர்த்தியில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொது செயலாளருமான மு.சண்முகம் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து உடல் நலம் விசாரித்தார். அருகில் மாவட்ட செயலாளர்கள், துரை.சந்திரசேகர், சாக்கோட்டை க.அன்பழகன், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீசன் மற்றும் பந்தல் சிவா, பாண்டியன் (தொமுச பேரவை துணை தலைவர்), பெரும்பாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.கே.பாஸ்கர் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 103-ஆவது பிறந்த நாளை

# புத்தெழுச்சியுடன் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவியை வழங்கிக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தூத்துக்குடி,மே.30- திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை அரை நூற்றாண்டு காலம் சிறப்புடன் நிறைவேற்றியவர். 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புவகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 103வது பிறந்த நாளை புத்தெழுச்சியுடன் கொண்டாடுங்கள்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிலிலும் வித்தகராக திகழ்ந்த தமிழ் தாயின் தலைமகன், தமிழ் மொழியை, தமிழர்களை தன் உயிராய் நேசித்தவர், தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்ட விடாப்பிடியாக போராடி வெற்றி கண்டவர், உயர் கல்வியை வளர்த்தெடுக்க அயராது உழைத்து முத்திரை பதித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞரின் செயல்பாட்டு சிறப்பினை பின்பற்றி தமிழக மக்களுக்காக தொடர்ச்சியாக செயலாற்றி வரும் தி.மு.க தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் 03.06.2026 அன்று காலை 9 மணிக்கு கலைஞர் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

அதே போல் அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக அலுவலகங்களிலும், சார்பு அணிகளின் அலுவலகங்களிலும், மாநகராட்சி வட்டங்கள், நகராட்சி, பேரூராட்சி வார்டுகள் மற்றும் ஒன்றியங்களில் ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிளைகளிலும் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி ஒலிபெருக்கி அமைத்து கழக கொடியேற்றி கொண்டாட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் திருச்செந்தூர், ஓட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள முதியோர் இல்லம், குழந்தைகள் காப்பகம், மாணவர் விடுதி, ஆதரவற்றோர் இல்லம், மனநலம் பாதிக்கப்பட்டோர் காப்பகம் அகிய இடங்களில் உள்ளவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்து, நலத்திட்டங்களை வழங்கிட வேண்டுமாய் கழகத்தினரை கேட்டுக்கொள்கிறோம். பல்வேறு முக்கிய இடங்களில் கலைஞர் பிறந்தநாள் தெருமுனைப் பிரச்சார கூட்டங்களை நடத்திட வேண்டும்.

மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### நீதிபதிகளை 'புனிதர்கள்' எனக் கருத வேண்டியதில்லை!

# நீதித்துறையிலும் ஊழல் இருப்பதை மறுக்க முடியாது!

## கருப்பு திரைப்படம் குறித்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு அதிரடி கருத்து!

சென்னை, மே.30- நீதித்துறையில் ஊழல் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று தெரிவித்துள்ள சென்னை உயர்நீதிமன்றம், நீதிபதிகளை புனிதர்களாக கருதவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. நீதித்துறையை அவமதிக்கும் வகையில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறி கருப்பு திரைப் படத்தை தடைசெய்யக் கோரி, வழக்கறிஞர் தமிழ் வேந்தன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வு கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது.

**கருப்பு திரைப்படத்தின் கதைக்களம்!**

அந்த உத்தரவில் நீதிபதிகள், கருப்பு திரைப் படத்தின் கதைக் களம் என்பது ஏழு கிணறு என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு நீதிமன்றம். அதில் இருக்கும் தலைமை நீதிபதி ஊழல்வாதியாகவும், தொழில் நெறிமுறையற்ற வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றத்தின் செயல்பாடுகள் மீது அளவற்ற அதிகாரத்தைச் செலுத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. நீதித்துறையில் ஊழல் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஊழல் நீதிபதிகள் இருந்தார்கள், இருக்கவும் செய்கிறார்கள். நீதிபதிகளை புனிதமானவர்களாக கருத வேண்டிய அவசியம் இல்லை.

நீதித்துறையில் ஊழல் என்ற கூற்றுகளை நாங்கள் முழுமையாக ஆதரிக்கவில்லை. நீதித்துறை ஊழல் நிகழ்வுகளை அறிவோம், எதிர்கொண்டும் இருக்கிறோம். சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வும் இதுபோன்ற கருப்பு ஆடுகளை தவறாமல் வெளியேற்றிக்கொண்டுதான் இருக்கிறது. வழக்கறிஞர்கள் சங்கத்தின் சில உறுப்பினர்களுக்கு ஊழல்வாதிகளுடன் தொடர்பு இல்லாமல், நீதித் துறையில் ஊழல் நிகழ முடியாது.

**ஒரு கலைஞனுக்கான சுதந்திரம் வேண்டும்!**

ஊழல்வாதிகளைப் பிடிப்பதற்கும், நிலைமையை உரிய முறையில் கையாளுவதற்கும் உயர் நீதிமன்றத்தின் விழிப்புணர்வு கண்காணிப்பே ஆதாரமாக விளங்குகிறது. எந்தவொரு சிறப்புத் திரையிடலையும் ஏற்பாடு செய்யுமாறு தயாரிப்பாளரிடம் கேட்காமல், கருப்பு படத்தை எங்களில் ஒருவரான நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பார்த்துள்ளார். ஒரு நெறிமுறையற்ற வழக்கறிஞருக்கும், ஊழல் நீதிபதிக்கும் இடையிலான தீய கூட்டணியை கொண்ட கருப்பு திரைப்படத்தில், நீதித் துறை அமைப்பு மிகைப்படுத்தி சித்தரிக்கப் பட்டுள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், தமிழில் திரைப் படங்கள் அப்படித்தான் பார்க்கப்படுகின்றன. தன்னைச் சூழ்ந்திருக்கும் டஜன் கணக்கான வில்லன்களை கதாநாயகன் தனி ஒருவனாக வீழ்த்துவான். தமிழ் சினிமாவில் எல்லாமே மிகை உணர்ச்சி கொண்டது. எனவே, 'கருப்பு' படத்தையும் ஒரு தனித்துவமான படைப்பாகவே பார்க்க வேண்டும். எப்படியிருந்தாலும், ஒரு கலைஞன் தனது சொந்த வழியில் தன் படைப்பை வழங்குவதற்கு தரப்பட்ட உரிமையே கலைச் சுதந்திரம் என்று அழைக்கப்படுகிறது.

ஒரு கலைப் படைப்பு முற்றிலும் வேறுபட்ட தராசில் எடைபோடப்படும். ஒரு கலைஞனுக்கு அதிக செல்வாக்கும் சுதந்திரமும் உண்டு. ஒரு கார்ட்டூனிஸ்டுக்கு எது பொருந்துமோ அது ஒரு திரைப்படத் தயாரிப்பாளருக்கும் பொருந்தும். அவர் வழங்கும் கதையில் மிகைப்படுத்தல் இருக்கும். தவறுகள் இருக்கும். அது முற்றிலும் புனைகதையாகவும் இருக்கலாம் அல்லது ஒரு செய்தியைக் கொண்டிருக்கலாம் அல்லது பொழுதுபோக்குடன் மட்டும் நின்றுவிடலாம். ஒரு கதையை வழங்கும் விதமும், வழங்கும் உள்ளடக்கமும் படைப்பாளியிடமே விடப்பட வேண்டும்.

**படைப்பாற்றல் மதிக்கப்பட வேண்டும்!**

படைப்பாளி தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழையாத வரை படைப்பாற்றல் மதிக்கப் பட வேண்டும். கருத்து சுதந்திரம் என்பது ஒருவரின் கருத்தை வாய்மொழி, எழுத்து, அச்சு, படம் அல்லது வேறு எந்த வகையிலும் வெளிப்படுத்தும் உரிமை ஆகும். இது தகவல் தொடர்பு சுதந்திரம் மற்றும் கருத்தைப் பரப்புவதற்கான அல்லது வெளியிடுவதற்கான உரிமையையும் உள்ளடக்கும்.

கருப்பு திரைப்படம் நீதிமன்ற அவமதிப்பை உள்ளடக்கியது இல்லை என்ற கருத்தின் அடிப்படையில், தணிக்கைச் சான்றிதழ் வழங்கியிருக்கும்போது நீதிப்பேராணை நீதிமன்றம் அதன் கருத்தை மாற்றியமைக்காது. நாம் இப்போது சமூக ஊடகங்களின் காலத்தில் இருக்கிறோம். ஒரு கொடூரமான கூற்று கூறப்பட்டாலும், அதைப் புறக்கணிப்பதே நல்லது. நீதித்துறைப் பயணம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ராமாயணத்தில் ராமனின் அம்பில் சிக்கிய தவளையை போல, நீதிமன்றமே விழிப்புடன் இருக்கும் காவலனாக நிற்கிறது.

**நீதிமன்ற அவமதிப்பாக கருத வேண்டியதில்லை!**

அது குடிமக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது. கருப்பு படத்தின் இயக்குனர் ஆர்.ஜெ.பாலாஜி, கதாநாயகன் சூர்யா, நடிகை திரிஷா ஆகியோர் நீதித்துறை அமைப்பை அவமதித்துள்ளதால், அதை குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதி தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்று மனுதாரர் தமிழ்வேந்தன் தரப்பில் வாதிடப்பட்டாலும் இதை நீதிமன்றம் ஏற்கவில்லை.

ஆர்.கே.நாராயணனின் படைப்புகளில் மால்குடி என்பது ஒரு கற்பனைக் கிராமமாக இருப்பது போலவே, கருப்பு படத்தின் ஏழு கிணறு நீதி மன்றமும் ஒரு கற்பனையானதாகும். ஒரு கற்பனையான நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்கும் நபர் ஊழல்வாதியாகச் சித்தரிக்கப்படும்போது, அது 1971ம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தில் உள்ள தண்டனை விதிகளின் கீழ் வராது.

அவ்வாறு கற்பனையாக சித்தரிக்கப்பட்ட நீதிமன்றத்தில் ஊழல் என இயக்குநர் கூறியுள்ளாரே தவிர, ஒட்டுமொத்த நீதித்துறை அமைப்பையே ஊழல் நிறைந்ததாகச் சித்தரிக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே, கருப்பு படத்தை தடை செய்யக் கோரிய வழக்கில் முகாந்திரம் எதுவும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உத்தரவிட்டனர்.